# எபேசியர்

## விரிவாக்கப் புறக்குறிப்பு

I. *வாழ்த்துரை: விசுவாசமுள்ள பரிசுத்தவான்களுக்கு ஒரு நிருபம் (1:1, 2)*
   A. *ஊழியக்காரன்: "பவுல், ஒரு அப்போஸ்தலன்" (1:1)*
   B. *"பரிசுத்தவான்கள்": எபேசியர் (1:1)*
   C. *கரு பொருள்: "கிறிஸ்து இயேசுவில்" (1:1)*
   D. *வாழ்த்துரை: "கிருபையும்" "சமாதானமும்" (1:2)*

II. *மகிமையுள்ள சபையின் நோக்கம் (1:3-3:21)*
   A. *ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் சபையின் நோக்கமும் (1:3-14)*
      1. *கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டிருக்கிறார் (1:3, 4)*
         a. *தேவனுக்கு ஸ்தோத்திரம் (1:3)*
         b. *நமக்கு உள்ள தேவனுடைய ஆசீர்வாதம் (1:3)*
         c. *தெய்வீக நோக்கத்திற்கென்று தேவன் நம்மை தெரிந்து கொள்ளுதல் (1:4)*
         d. *நம்மை பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமற்றவர்களுமாய்க் காணுகிறார் (1:4)*
      2. *முன் குறித்தல் (1:4-6)*
         a. *அன்பினாலே (1:4)*
         b. *புத்திர சுவிகாரத்தினாலே (1:5)*
         c. *தேவனுடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக (1:5, 6)*
      3. *மீட்கப்பட்டோம் (1:7)*
      4. *மன்னிக்கப்பட்டோம் (1:7, 8)*
      5. *அறிவூட்டப்பட்டோம் (1:8-10)*
         a. *தேவனுடைய ஞானத்தினாலும் புத்தியினாலும் (1:8, 9)*
         b. *தேவனுடைய சித்தத்தின் இரகசியம் (1:9)*
         c. *கிறிஸ்துவுக்குள் தேவனுடைய நோக்கம் (1:9, 10)*
      6. *சுதந்தரம் கொடுக்கப்பட்டோம் (1:10-12)*
         a. *ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள பகுதி (1:10, 11)*
         b. *தீர்மானிக்கப்பட்ட நோக்கம் (1:11)*
         c. *மகிமைக்கு புகழ்ச்சியாயிருக்கும்படி கிறிஸ்துவின் மேலுள்ள நம்பிக்கை (1:12)*
      7. *கிறிஸ்துவுக்குள் முத்திரிக்கப்பட்டோம் (1:13, 14)*
         a. *கிறிஸ்தவர்களின் முத்திரை பரிசுத்த ஆவி (1:13)*
         b. *நமது சுதந்தரத்தின் அச்சாரம், பரிசுத்த ஆவி (1:14)*
         c. *தேவனுக்கு சொந்தமானவர்கள் மீட்கப்பட்டவர்கள் அவருடைய மகிமைக்கு புகழ்ச்சியானவர்கள் (1:14)*

B. *நிருபத்தைப் பெறுவோர் ஆழமாய் சபையின் நோக்கத்தை அறிந்து கொள்ளும்படி பவுலின் ஜெபம் (1:15-23)*
   1. *முகவுரை (1:15-18)*
      a. *அவர்களுக்காக அவர் நன்றிசெலுத்துதல் (1:15, 16)*
      b. *அவர்களை அவர் நினைத்துக் கொள்ளுதல் (1:16, 17)*
      c. *அவர்களுக்காக அவர் விண்ணப்பம் பண்ணுதல் (1:18)*
   2. *தேவனுடைய அழைப்பின் மகத்தான தன்மை, அவருடைய சுதந்திரம் மற்றும் அவருடைய வல்லமை (1:18, 19)*
      a. *தேவனுடைய அழைப்பின் நம்பிக்கையை அறிந்து கொள்ளுதல் (1:18)*
      b. *தேவனின் சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் (1:18)*
      c. *தேவனுடைய பலத்த சத்துவத்தின் வல்லமை (1:19)*
   3. *தேவனுடைய வல்லமை விளங்கப் பண்ணப்படுதல் (1:20-23)*
      a. *கிறிஸ்து உயிர்த்தெழுப்பப்பட்டார்! (1:20)*
      b. *கிறிஸ்து உயர்த்தப்பட்டார்! (1:20)*
      c. *கிறிஸ்து அதிகாரம் கொடுக்கப்பட்டார்! (1:21)*
         (1) *எல்லாத் துரைத்தனத்தின் மேலும் அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும் மேலாக (1:20)*
         (2) *எல்லா நாமத்துக்கும் மேலாக (1:20)*
         (3) *எல்லாவற்றுக்கும் எல்லா காலங்களிலும் (1:21, 22)*
      d. *கிறிஸ்து சபைக்கு தலையானார்! (1:22, 23)*
         (1) *சபை (சரீரம்), கிறிஸ்துவுக்கு (தலைக்கு) கீழ்ப்படிந்திருக்க வேண்டும் (1:22)*
         (2) *கிறிஸ்துவின் நிறைவு சபையே (1:23)*

C. *சபையின் நோக்கத்துக்குப் புறம்பே வாழ்வோரைக்குறித்த ஒரு விளக்கம் (2:1-3)*
   1. *பாவத்தில் மரித்தவர்களாயிருந்தார்கள் (2:1)*
   2. *உலகத்தோடு உலகமாய் வாழ்ந்தனர் (2:3)*
   3. *இச்சைகளின்படி வாழ்ந்தனர் (2:3)*
   4. *கோபாக்கினையின் பிள்ளைகளென குறிக்கப் பட்டனர் (2:3)*

D. *இரட்சிப்பைக் குறித்து தேவனுடைய நித்திய நோக்கம் (2:4-10)*
   1. *ஒரு அன்பின் நோக்கம் (2:4)*
   2. *ஒரு ஜீவியத்தின் நோக்கம் (2:5)*
   3. *ஒரு ஐசுவரியத்திற்கான நோக்கம் (2:6-10)*

E. *கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் ஒப்புரவாகுதல் (2:11-13)*
   1. *முன்னே கிறிஸ்துவுக்குத் தூரமாயிருந்தார்கள் (2:11, 12)*
   2. *இப்பொழுது கிறிஸ்துவுக்குள் சமீபமானார்கள் (2:13)*

F. *அவருடைய சரீரத்திற்குள் சமாதானம் ஏற்படசாத்தியமாயிற்று*

*(2:14-22)*

1. *ஒரே சரீரத்திற்குள் அனைத்து ஜனங்களுக்கும் சமாதானம் (2:14, 15).*
2. *ஒரே சரீரத்திற்குள் தேவனோடு சமாதானம் (2:16-22)*
    - a. *புதிதான ஒரே சரீரத்தில் பகைமை ஒழிக்கப்பட்டது (2:16, 17)*
    - b. *கிறிஸ்து மூலம் கிடைக்கப் பெற்ற சிலாக்கியம் (2:18)*
    - c. *இனியும் அந்நியர்களாயிராமல் தேவனுடைய வீட்டாராயிருக்கிறோம் (2:19-22)*

G. *புறஜாதிகளுக்கு பவுலின் தனிப்பட்ட ஊழியம் (3:1-7)*

1. *புறஜாதிகளின் நிமித்தமாய் கட்டுண்டவர் (3:1)*
2. *புறஜாதிகளினிமித்தம் தேவனுடைய கிருபையின் உக்கிராணத்துவம் (3:2)*
3. *வெளியாக்கப்பட்ட இரகசியத்தை பெறுகிற ஒருவர் (3:3-6)*
4. *ஒரு சுவிசேஷ ஊழியர் (3:7)*

H. *தேவனுடைய ஞானம் தெரிய வந்தது (3:8-13)*

1. *புறஜாதிகளுக்கு பிரசங்கிப்பதற்கான கிருபை (3:8)*
2. *தேவனுடைய கிருபையை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவதற்கான கிருபை (3:9)*
3. *தேவனுடைய ஞானத்தை தெரியப்படுத்துவதன் நோக்கம் (3:10)*
4. *தேவனுடைய நித்திய நோக்கத்தின் நிறைவேற்றம் (3:11, 12)*
5. *இருதயத்தை தளர விடாதிருக்க ஊக்கமளித்தல் (3:13)*

I. *வல்லமை, புரிந்து கொள்ளுதல் மற்றும் பரிபூரணத்திற்காக ஜெபம் (3:14-21)*

1. *முகவுரை (3:14, 15)*
2. *ஆவியினாலும் கிறிஸ்துவினாலும் வல்லமை உண்டாக விண்ணப்பம் (3:16, 17)*
3. *கிறிஸ்துவின் அன்பின் விசாலத்திற்கான ஜெபம் (3:17-19)*
4. *தேவனுடைய நிறைவுக்கான ஜெபம் (3:19)*
5. *ஸ்தோத்தரித்தல் (3:20, 21)*

III. *மகிமையுள்ள சபையின் நடைமுறைச் செயல் (4:1-6:20)*

A. *நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரராய் நடந்து ஒருமையைக் காத்துக் கொள்ளுங்கள்" (4:1-3)*

1. *அழைப்புக்குப் பாத்திரராய் வாழுதல் (4:1)*
2. *சுயத்தைக் குறித்த முறையான எண்ணம் (4:2)*
3. *பிறரைக் குறித்த சரியான எண்ணம் (4:2)*
4. *ஒருமையைக் காத்தல் (4:3)*

B. *ஏழுமடங்கு ஒருமையைக் கொண்டிருத்தல் (4:4-6)*

1. *ஒரே நம்பிக்கை (4:4)*
2. *ஒரே சரீரம் (4:4)*
3. *ஒரே ஆவி (4:4)*

4. ஒரே கர்த்தர் (4:5)
5. ஒரே விசுவாசம் (4:5)
6. ஒரே ஞானஸ்நானம் (4:5)
7. ஒரே தேவன் (4:6)

C. சபைக்கு கிறிஸ்து அளித்துள்ள வரங்களைப் புரிந்து கொள்ளுதல் (4:7-16)
   1. வெற்றி கொண்ட கிறிஸ்து வரங்களை அளித்தல் (4:7-10)
   2. கிறிஸ்து அளித்த வரங்கள் (4:11)
      a. அப்போஸ்தலர்கள் (4:11)
      b. தீர்க்கதரிசிகள் (4:11)
      c. சுவிசேஷகர்கள் (4:11)
      d. மேய்ப்பர்கள் (4:11)
      e. போதகர்கள் (4:11)
   3. கிறிஸ்து அளித்த வரங்களின் நோக்கம் (4:12)
   4. கிறிஸ்து அளித்த வரங்களின் இலக்கு (4:13-16)
      a. குழந்தைப் பிராயத்தில் இருந்த சபையின் வளர்ச்சி (4:13)
      b. சரீரத்தில் தனிப்பட்ட அவயவங்களின் வளர்ச்சி (4:14-16)

D. உள்ளத்தில் புதிதான ஆவியுள்ளவர்களாகுதல் (4:17-32)
   1. "இருளிலிருந்து வெளிச்சத்துக்குத் திரும்புதல்" (4:17-19)
   2. "பழைய மனுஷனைக் களைந்து புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுதல்" (4:20-24)
      a. "பழைய மனுஷனைக் களைதல்" (4:20-22)
      b. "புதிதான ஆவியுள்ளவர்களாகுங்கள்" (4:23)
      c. "புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்" (4:24)
   3. "பொய்யை விட்டு மெய்க்குத் திரும்புதல்" (4:25)
   4. "கோபத்திலிருந்து கட்டுப்பாட்டுக்குள் வருதல்" (4:26, 27)
   5. "திருடாமல் வேலைக்குத் திரும்புதல்" (4:28)
   6. "கெட்ட வார்த்தையை விட்டு நல்வார்த்தைக்குத் திரும்புதல்" (4:29)
   7. "ஆவியைத் துக்கப்படுத்தாமல் பிரியப்படுத்துதல்" (4:30)
   8. "கசப்பான செயல்களைவிட்டு ஒருவருக்கொருவர் தயவுடன் நடத்தல்" (4:31, 32).

E. "கிறிஸ்துவின் முன் மாதிரியைப் பின்பற்றி அன்பிலே நடந்து கொள்ளுங்கள்" (5:1-6)
   1. தேவனுடைய மற்றும் கிறிஸ்துவினுடைய அன்பைக் கொண்டிருத்தல் (5:1, 2)
   2. கீழ்ப்படிதலுள்ள வாழ்க்கையை வாழுதல் (5:3-6)

F. "வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்" (5:7-14)
   1. வெளிச்சத்திற்கான கனி கொடுத்தல் (5:7-10)
   2. அந்தகாரக் கிரியைகளை புறந்தள்ளி அவைகளுக்கு எதிர்த்து நிற்குதல் (5:11-13)

3. கவனமாய் நடந்து கொள்ளுதல் (5:14)

G. "ஞானவான்களாய் நடந்து கொள்ளுங்கள்" (5:15-6:20)

1. தேவன் மேலும் மற்றவர்கள் மேலும் கவனம் குவித்து நடந்துகொள்ளுதல் (5:15-21)
   a. "காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்" (5:15, 16)
   b. "தேவனுடைய சித்தத்தை உணர்ந்து கொள்ளுதல்" (5:17)
   c. "ஆவியினால் நிறைந்திருத்தல்" (5:18-21)
      (1) "பாடல்களினால் தேவனைத்தொழுதல்" (5:19)
      (2) "நன்றி செலுத்துதல்" (5:20)
      (3) "ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருத்தல்" (5:21)
2. புருஷர்களாக மனைவிகளாக கனப்படுத்தும் உறவுமுறை (5:22-33)
   a. மனைவிகளே "கீழ்ப்படிந்திருங்கள்" (5:22-24)
   b. புருஷர்களே: "அன்புகூருங்கள்" (5:25-33)
3. பெற்றோர்களாக பிள்ளைகளாகக் கனப்படுத்தும் உறவுமுறை (6:1-4)
   a. பிள்ளைகளே: "கனப்படுத்தி கீழ்ப்படியுங்கள்" (6:1-3)
   b. பெற்றோரே: (பிதாக்களே:) "சிட்சையிலும் போதனையிலும் வளரச் செய்யுங்கள்" (6:4)
4. "எஜமானர்களாக வேலைக்காரர்களாக கனப்படுத்தும் உறவுமுறை" (6:5-9)
   a. வேலைக்காரர்களே: "கீழ்ப்படிந்திருங்கள்" (6:5-8)
   b. எஜமானர்களே: "நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொள்ளுங்கள்" (6:9).
5. கர்த்தருக்குள் வல்லமையோடே தரித்திருத்தல் (6:10-20)
   a. அறிவுறை: "பலப்படுங்கள்" (6:10)
   b. போதனை: "தேவனுடைய சர்வாயுதவர்க்கங்களைத் தரித்துக் கொள்ளுங்கள்" (6:11-17)
   c. விண்ணப்பம்: "வேண்டுதலோடு விழித்துக் கொண்டிருங்கள்" (6:18-20)

IV. வாழ்த்துரை: சமாதானமும் ஆறுதலும் கொண்ட ஒரு ஆசீர்வாதம் (6:21-24)

A. பவுலின் சூழ்நிலை குறித்த செய்தி (6:21, 22)

B. சமாதானம் மற்றும் கிருபையினால் வாழ்த்துதல் (6:23, 24)